REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 14உ சனி (28—5—55) ★ ★ வெளியீடு: வைகாசி 15உ ஞாயிறு (29—5—55) [இதழ் 297

சிறையில் 17,000 மாவ் மாவ் இயக்கத்தினர்!

நைரோபி, மே 25—

உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரி திரு ஜான் குஸாக் என்பவர், கென்யா மேல் சபையில், நாட்டிலுள்ள சிறைச்சாலைகளிலும், காவல் முகாம்களிலும் நாள் ஒன்றுக்குச் சராசரி 83,000 மக்கள் 14,300 சிறைக் காவலர்களால் காவல் புரியப்பட்டு வருகின்றனர் என்றும், இக்கைதிகளில் 17,000 பேர் மாவ் மாவ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 19,000 பேர் அவசர நடவடிக்கை காரணமாகக் காவலில் வைக்கப்பட்டவர்கள் என்றும் அறிவித்தார்.

'அன்று வாழ்ந்தோம்—இடையில் வீழ்ந்தோம்'

'இன்று மீண்டும் எழுந்து நடக்க முனைவோம்'

தமிழக மறுமலர்ச்சி குறித்து

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் விளக்கம்

"ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும், மொழிக்கு மட்டும்தான் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கின்றது; ஆனால், உலகில் வேறெந்த மொழியிலும் இல்லாத வகையில், வாழ்க்கைக்கே தமிழ் மொழியில் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது—அதுதான் தொல்காப்பியம்; இன்றைக்கு சுமார் 2 அல்லது 3 ஆயிரம் ஆண்டுகளுக்குமுன், தொல்காப்பியம் எழுதப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்; அந்தக் காலத்திலேயே வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்திருப்பதென்றால்—அதற்கு முன் எத்தகையதோர் பண்பட்ட வாழ்க்கையை மக்கள் பெற்றிருந்தால்—அது சாத்தியமாகும் என்பது நமக்கு தெரிய வருகிறது; தொல்காப்பியமே, அதற்கு முன்பிருந்த பல நூல்களைப் படித்தறிந்து எழுதப்பட்டதாக அதிலேயே காணக் கிடக்கிறது.

"'கா கா' என்ற சொல், அந்தப் பறவை, 'கா, கா' என்று கரைவதின் ஒலியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது; ஒருவர் சாப்பிட்டுக்கொண்டிருந்த உணவை காகம் எடுத்துச்சென்றுவிட்டதானால் மற்றவர், எது உணவைக் கொத்தித் தின்றுவிட்டுச் சென்றது என்று கேட்டதற்கு, 'கா கா' என்று அதன் கரைதலைக் குறிப்பிட்டு, அந்தப் பறவையின் பெயரே 'கா கா' என்ற சொல்லாக வழங்கியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.

"அப்படியேதான், இன்று நாம் காணும் பொருள்களுக்கெல்லாம் பெயர் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படி எத்தனையோ லட்சோபலட்சம் சொற்கள் உருவான பிறகுதான் அவை பரவி வளர்ந்து, மொழிக்கு இலக்கணம் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கே எத்தனையோ நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்குமெனக் கூறப்படுகிறது; அந்த நிலையில், மொழிக்கு மட்டுமின்றி அந்த மொழி பேசும் மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தது என்றால், அதன் சிறப்பு எத்தகையது? அதன் 'தொன்மை' எத்தனை பெருமைக்குரியது?

"இன்று நாட்டில் நாம் வேண்டுமென்கிற காதல் வாழ்க்கை அன்று எவ்வாறு இருந்தது என்பதெல்லாம் பற்றி தொல்காப்பியம் கூறுகிறது;

"'இப்படித்தான் இருக்க வேண்டும்,' என்று உலகம் இன்றும் திடமாக முடிவு செய்யாதிருக்கிற 'வாழ்க்கை'—'அன்று எப்படி இருந்தது?—எப்படி இருக்க வேண்டும்?' என்பதை வர்ணித்து, வரையறுத்து, 'இப்படி அமைவதுதான் நல்வாழ்க்கை' என்று இலக்கணமும் வகுத்துத் தந்திருக்கிற பெருமையுடைய தமிழ்நாடுதான்—திராவிடந்தான் இன்று சீரழிந்துகிடக்கிறது!

"சங்க காலத்துப் புலவர்களால் வர்ணிக்கப்படுகிற எந்த மன்னனும், தன்னாற்றலையும், தன்னறிவையும் நம்பித்தான் ஆட்சி செலுத்தியதாகவும், போர் தொடுத்து வெற்றி கண்டதைாகவும் கூறப்படுகிறதே தவிர, எந்த மன்னனும், 'வாயு'வாஸ்திரத்தையும், 'அக்கினி'யாஸ்திரத்தையும் நம்பியதாகக் கூறப்படவில்லை;

"ஒரு காலத்தில் பண்புடன்-நெறி முறையுடன்-தன்னாற்றல், தன்னறிவுடன் வாழ்ந்த மக்களிடையே, இடைக்காலத்தில், புராண இதிகாசக் கருத்துக்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன என்பது புலனாகிறது;

"ஒரு காலத்தில், மலர்ச்சியுற்று மணம் பரப்பிக்கொண்டிருந்த தமிழகம்—திராவிடம் இடைக்காலத்தில் வீழ்ந்துபட்டது; இன்று, 'திராவிடம், மீண்டும் தலைதூக்க வேண்டும்—முன்பு பெற்றிருந்த மலர்ச்சியை திரும்பப் பெற வேண்டும்—திராவிடம் மறுமலர்ச்சியடைய வேண்டும்,'—என்று விரும்புகிறது தி. மு. கழகம்!

"ஆஸ்திரேலியாவுக்கும், அமெரிக்காவுக்கும் முதல் மலர்ச்சியே இப்போதுதான்; ஆனால், கிரேக்கமும், எகிப்தும் ஒரு காலத்தில் மலர்ந்திருந்தவை; இடையில், மதத்திற்கு அடிமைப்பட்டு, மணம் குன்றி, மங்கி மடிந்தவை; இன்றைக்கு, முன்னூறு அல்லது, நானூறு ஆண்டுகளுக்கு முன்பே மறுமலர்ச்சி—மீண்டும் மலர்ச்சி பெறத் தொடங்கியவை; ஆனால், தமிழகத்திற்கு, மறுமலர்ச்சியே இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் துவங்கியிருக்கிறது,"

—என்று, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை—'நேப்பியர் பார்க்' மைதானத்தில் 27—5—55-ல் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

39-வது வட்டத்தில் உள்ள மறுமலர்ச்சி நூல் நிலையத்தின் நான்காம் ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் 27—5—55 அன்று சென்னை சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பார்க் மைதானத்தில் தோழர் அ. வாணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பல்லாயிரக்கணக்கான தோழர்கள் திரண்டிருந்தனர்.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் தமிழக மறுமலர்ச்சியின் மூலவர்கள் திராவிட இயக்கத்தவர்தான் என்றும், மறுமலர்ச்சியின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் 'மறுமலர்ச்சி' பற்றி நீண்டதோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

சிம்சன் கம்பெனி திராவிடத் தொழிலாளர் சார்பில் பொதுச் செயலாளருக்கு கைத்தறி ஆடை அணிவிக்கப்பெற்றது.

பொதுச் செயலாளரிடம், கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரூ. 15—1—6 மாநில மாநாட்டு நிதிக்கெனத் தரப்பட்டது.

பொதுச் செயலாளர் அவர்கள் மேலை நாடுகளின் நாகரீகத் தோற்றம், அழிவு, மீண்டும் வளர்ச்சி பெற்றது குறித்தும், தமிழக வரலாறு குறித்தும், மறுமலர்ச்சி பற்றியும் சிறிய உதாரணங்கள், தக்க ஆதாரங்களுடன் ஓர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

அகாலி தள மொழிவழிக் கிளர்ச்சி: 1,352 பேர் கைது

நிலைகுறித்து முதன்மந்திரி விளக்கம்

சாந்திகர், மே 27—

அகாலி தளத்தினரின் கிளர்ச்சி சம்பந்தமாக இதுவரையில் 1,352 அகாலியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும், இவர்களில் 785 பேர் 144 தடையுத்திரவை மீறியதற்காக கைது செய்யப்பட்டனரென்றும், 72 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட்டுள்ளனரென்றும் பஞ்சாப் முதன் மந்திரி பிம்சேன் சச்சார் தெரிவித்துள்ளார்.

'சுலோகங்'களை ஒலிப்பதற்குத் தடையில்லை என்றும், மாநில எல்லைகளை மாற்றி அமைத்தல் சம்பந்தமாக நடத்தப்படும் ஊர்வலங்களும், கிளர்ச்சிகளும் சில விடங்களில் தடை செய்யப்பட்டுள்ளன என்றும், சம்பந்தப்பட்ட இருதரப்பாரிடையே மோதுதல் ஏற்படாமலிருப்பதற்கே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும், எங்காவது ஒரு கூட்டம் தடை செய்யப்பட்டதென்றால் அகாலியர்களின் சட்ட விரோதமான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கே அந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்றும் அவர் கூறினார்.

அரசாங்கம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட உறுதி பூண்டுள்ளது என்றும், சட்டத்தை மீறுவதை அரசாங்கம் பொறுத்துக்கொள்ளாது என்றும் அவர் மேலும் கூறினார்.

சீன அதிகாரியின் தலைமறைவு?

'காஷ்மீர் இளவரசி' விபத்து எதிரொலி

புதுடில்லி, மே 27—

விபத்திற்குள்ளான 'காஷ்மீர் இளவரசி' என்ற விமானம் ஹாங்காங் விமான நிலையத்தில் தங்கிச் சென்றபோது அந்த விமான நிலையத்தில் வேலையில் இருந்த ஒரு சீன அதிகாரி விபத்திற்குப் பின்னர் திடீரென்று தலைமறைவாகி பார்மோசாவிற்குச் சென்றுவிட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றனவாம்!

★

பல சீனர்கள் கைது!

ஹாங்காங்கில் தங்கியபோது 'காஷ்மீர் இளவரசி' விமானத்தில் வெடி குண்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தாங்கள் கருதுவதாக ஹாங்காங் சர்க்கார் அறிவித்தனர். உண்மையைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைத் தண்டிக்க உறுதிகொண்டிருப்பதாக ஹாங்காங் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறாராம்.

போலீஸ் விசாரணைகள் நடந்துகொண்டிருப்பதாயும், பின்னர் விரிவான அறிக்கையை சர்க்கார் வெளியிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பல சீனர்களை ஹாங்காங் போலீசார் கைது செய்துள்ளனராம்.

விவசாய அபிவிருத்தி

இலாகா அதிகாரிகள் விவாதம்

புதுடில்லி, மே 27—

மாநில மத்திய விவசாய இலாகா அதிகாரிகள் கூடி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய உற்பத்தியில் அடைய வேண்டிய இலட்சிய எல்லை குறித்து விவாதித்தனர் என்று தெரியவருகிறது.

இரண்டாவது திட்டத்தின் இலட்சிய உற்பத்தி எல்லை 10 கோடி டன் உணவு தானியம், 10 லட்சம் பேல் சணல், 13 லட்சம் பேல் பருத்தி, 26 லட்சம் டன் கரும்பு என நிர்ணயிக்கப்பட்டதாம்.

★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—14/55

பெங்களூர் மாவட்டம்

[அறிக்கை 10/55-ல் கண்ட விதிகளோடு கீழ்க்கண்ட விதிகளும் இயையுமாறு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்]

பெங்களூர் மாவட்டத்திலுள்ள (கர்நாடகப் பகுதிகளில் உள்ள) கிளைகள் ஒவ்வொன்றும் மாவட்டக் கிளைக்கு இரண்டு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தற்காலிகமாக அளிக்கப்படுகிறது.

பெங்களூர், வேறு அறிக்கை வரும்வரையில் சென்னையைப்போன்று ஒரு மாவட்டமாகக் கருதப்படும். கர்நாடகத்திலுள்ள எல்லாக் கிளைகளும் அந்த மாவட்டத்தில் இணைய அனுமதிக்கப்படுகின்றன.

பெங்களூர் மாவட்டம், பொதுக்குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இப்போதைக்கு அனுமதிக்கப்படுகிறது.

கிளைகள், பதிவுச் சீட்டுகளை, 'தி. மு. கழகம், பிளாக்பள்ளி (சிவாஜி நகர்), பெங்களூர்-1,' என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (முன்னரே தேர்தல் நடத்தியிருந்தாலும் கிளை உறுப்பினர்கள் மீண்டும் கூடி, முன்னைய முடிவை உறுதி செய்துகொண்டு இரண்டு மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும்)

பெங்களூர் மாவட்டச் சிற்றூர்-பேரூர்-வட்ட (Division)க் கிளைகள் 12—6—55 ஞாயிறன்று தேர்தல் விதி முறைப்படி தேர்தல் நடத்துமாக.

மாவட்டக் கிளைத் தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் பொதுச் செயலாளரால் அறிவிக்கப்படும்.

★

சித்தூர் மாவட்டம்

சித்தூர் மாவட்டத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகள், பெங்களூர் மாவட்டத்தைப் பொறுத்துச் சொல்லப்பட்டுள்ள விதி முறைகளைக் கடைப்பிடித்து மாவட்டக் கிளையை அமைக்குமாக.

மாவட்டக் கிளைத் தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

"அறிவகம்" சென்னை } 28—5—55 }

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—5—'55 சனி

கண்துடைப்பு வேண்டாம்

'குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவழம்போல் மேனியும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்,' என்ற வர்ணனைக்கு இலக்காகும் வகையில் மனிதப் பிறவிகள், இந்த நாட்டில், இன்று இருக்கவில்லை.

எண்ணெய்க்குப் பஞ்சமடைந்த தலையும், எலும்புக்குள் தஞ்சமடைந்த கண்ணும், ஒட்டிய கன்னமும், வறுமை வாட்டியஉடலுமாகத்தான் மக்கள் காட்சி தருகிறார்கள். அந்த மக்களின், வளைந்து வளம் குன்றிய வாழ்வை, நேர் செய்து வளம் பெறச் செய்யத்தான், தாங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் பல தீட்டி நிறைவேற்றிவருவதாக இந்திய அரசாங்கமும், அதன் கீழுள்ள பல மாநில அரசாங்கங்களும் கூறிவருகின்றன.

எட்டாண்டுகள் உருண்டோடிவிட்டன — கொள்ளையடித்துக் கொட்டமடித்துக் கொண்டிருந்த வெள்ளையர் வீற்றிருந்த ஆட்சி பீடத்தில் காங்கிரஸ் ஆளவந்தார்கள் அமர்ந்து! அன்று முதல் இன்றுவரை, 'ஏழைக்கு ஏது இன்பம்?'—என்ற நிலையை மாற்ற—ஏழையரின் வாழ்க்கைத்தரத்தை ஏறுமுகப்படுத்த, 'இதோ திட்டங்கள்! அதோ திட்டங்கள்! கோடிக்கணக்கான ரூபாய் செலவில் திட்டங்கள்! கொஞ்சம் பொறுங்கள்! திட்டங்கள் நிறைவேறியதும் செல்வம் பெருகும்; வளம் கொழிக்கும்; வாழ்வு உங்களைத் தேடிவரும்!' என்று, நாட்டின் நாயகர்கள் கூறாத நாளில்லை.

என்றாலும் — திட்டங்கள் பல நிறைவேறிவிட்டதாகக் கூறப்பட்டாலும், இன்னும், குனிந்தவர் நிமிர்ந்துவிடவில்லை —தாழ்வுற்ற வாழ்வு உயர்ந்துவிடவில்லை!

"அரச மரத்தைச் சுற்றியதும் அடிவயிற்றைத் தொட்டுப் பார்ப்பதா? திட்டங்கள் இப்போதுதானே நிறைவேறிவருகின்றன! முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தானே, அடுத்த ஆண்டில் துவங்கவிருக்கிறது? கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்வு தருவதென்றால் சாமானியமா? இரண்டாம் திட்டம், எங்கள் விருப்பப்படி பணம் கிடைத்து நிறைவேறிவிட்டால்கூட, 'எல்லா மக்களும்வாழ்வுபெற்றுவிடுவர்' என்று கூற முடியாதே! இப்போதுள்ள தேசிய வருமானம் இரட்டிப்பாவதற்கே இன்னும் பதினைந்தாண்டுகள்—அதாவது, இன்னும் மூன்று 'ஐந்தாண்டுத் திட்டங்கள்' — அல்லவா தேவை! அதற்குள், 'வளைந்த வாழ்வு நிமிர்க்கப்படவில்லையே,' என்று துடித்தால்— 'என்ன செய்தீர்கள்,' என்று இடித்துரைத்தால் — 'இவர்களால் ஏதும் முடியாது,' என்று. வசைபுராணம் படித்தால் நாங்கள் என்ன செய்வது?" என்று, காங்கிரஸ்காரர்கள் கூறுவார்கள் என்பதும் நமக்குத் தெரிந்துதான் இருக்கின்றது.

காங்கிரஸ் ஆளவந்தார்கள் தீட்டி நிறைவேற்றிவரும் திட்டங்கள் எப்போது பலன் தரும், யார் யாருக்கு என்ன வகையான பலன் தரும் என்பதை ஆராயப் புகவில்லை இங்கு, நாம்.

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும, அவற்றால் மக்கள் பெற்றுவருவதாகக் கூறப்படும் பலன் பற்றியும் நாம் அவ்வப்போது கருத்தறிவித்து வந்திருக்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமூக நலத்திட்டம் ஆகியவற்றிற்கும் உள்ளடங்காத பகுதிகளின் அபிவிருத்திக்காக ஆட்சியிலிருப்போர் 'ஸ்தல அபிவிருத்தித் திட்டம்' என்ற அடிப்படையில், பல காரியங்களைச் செய்து வருகிறார்களாம்.

அந்தத் திட்டப்படி, சென்னை சர்க்கார், மலபார் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக கடந்த ஆண்டில் ரூ. 8,24,000 வழங்கியிருக்கிறார்கள்; இதில் செலவிடப்பட்டது ரூ. 1,90,000 மட்டும்தான் என்றும், எஞ்சிய ரூ. 6,34,000-த்தையும் திரும்பவும் சர்க்காரிடம், செலவிடப்படாமலேயே தரப்பட்டுவிட்டதாகவும் தெரிய வந்திருக்கிறது.

இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டப்படி, சர்க்கார் எவ்வளவு தொகை வழங்குகிறதோ அதற்குச் சமமாக, அந்தத் திட்டத்தால் பயனடையும் மக்களும், உழைப்பாகவோ பணமாகவோ தங்கள் பங்கைச் செலுத்த வேண்டுமென்றிருக்கிறது.

இந்த நிபந்தனையின் விளைவாகத்தான் மலபார் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் மிகப் பெரும் பகுதி செலவிடப்படாமலேயே, சர்க்காரால் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது.

திட்டத்தின் பலனை அனுபவிக்கவிருக்கும் மக்கள், தங்களிடம் தருவதற்கு உழைப்போ பணமோ இல்லை என்று கூறியிருக்கிறார்கள் என்பதுதான், 'பணம் செலவு செய்யப்படவில்லை' என்பதன் பொருள்.

அப்படியானால், அந்த மக்களுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்ற விருப்பம் இல்லையா என்றால், நிச்சயமாக இருக்கத்தான் செய்யும்; ஆனால், அவர்கள் எங்கே போவார்கள் பணம் தர? அவர்களது வாழ்க்கை நிலை, அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுகிற வகையில் இல்லை. உழைப்பும் அப்படித்தானே! நாள் முழுதும் உழைப்பவர்களுக்கு, அந்த நாளை, பட்டினியின்றி, கால் வயிற்றுடன் ஓட்டவே வழி இருப்பதில்லையே!

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி வாய் கிழியப் பேசும் சர்க்கார், இந்த நிலை பற்றியும் எண்ணிப் பார்த்தாக வேண்டுமென்பதற்காகத்தான் இதனை எழுதுகிறோம்.

மலபார் மாவட்டத்திலிருந்து காட்டப்பட்டிருக்கும் உதாரணத்தை ஒட்டிய நிலை வேறு பல மாவட்டங்களிலும் இருக்கத்தான் இருக்கும்.

'கொடுத்தோம் — அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லை' என்று கண் துடைப்பு வேலை செய்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்காமல், சர்க்கார், அனுமதித்த தொகையில், மக்கள் ஒத்துழைப்புடன் செலவு செய்யப்பட்டது போக எஞ்சியுள்ள தொகையைத் திரும்பப் பெறுமுன்னர், அந்தத் தொகையை, மக்களின் ஒத்துழைப்பில்லாமலேயே செலவு செய்ய முன்வர வேண்டும். பொதுவாகவே, வாழ்வின் அடித்தளத்தில் தவிக்கும் நிலையிலிருக்கும் மக்களை, அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவக் கோருவது, கிணற்றில் வீழ்ந்துவிட்ட ஒருவரை, 'நாலு படிக்கட்டுகள் ஏறி வந்துவிடு; நானும் உன்னோடு சேர்ந்து உயரத் தூக்குகிறேன்,' என்பதுபோன்றுதானிருக்கும்!

எனவே, பள்ளி அமைத்தல், குடி நீர்க் கிணறுகள் அமைத்தல், ஓரளவேனும் வசதியான போக்குவரத்திற்கான சாலைகள் அமைத்தல் போன்ற காரியங்களை உள்ளடக்கிய ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்காக சர்க்கார் — மக்களின் ஒத்துழைப்பு அவர்கள் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை என்பதினாலேயே— ஒதுக்கிய பணத்தைச் செலவிடாமல் போவது, உண்மையிலேயே, 'மக்கள் நலனில் அக்கரை கொண்ட சர்க்காரின் போக்கல்ல' என்று காங்கிரஸ்காரர்களே கூட குறை கூறுவதற்கு தன்னை அரசாங்கம் இலக்காக்கிக் கொள்ளக்கூடாது என்பது நம் விருப்பம்.

1000 மக்கள்தொகையுள்ள கிராமங்களில்!

கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலாகும்

ஆயிரமும் அதற்கு அதிகமும் மக்கள் தொகையுள்ள பம்பாய் மாநில கிராமங்களில், 7 முதல் 9 வயது வரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் அடுத்த கல்வி ஆண்டு முதல் கட்டாய இலவசக் கல்வி அளிக்க அம்மாநில சர்க்கார் முனைந்துள்ளது. இதற்கென ரூ 70 லட்சம் சர்க்காருக்கு செலவாகுமாம்; 1,000 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்களாம்!

இரயில்வே நிரந்தர சிப்பந்திகளுக்குத் தடை!

'கெஜட்' பதிவு பெற்றவர்களாயினும் சரி—பெறுதவர்களாயினும் சரி — இந்திய இரயில்வேக்களில் பணியாற்றும் நிரந்தரத் தொழில் நுணுக்கச் சிப்பந்திகள் அனைவரும், அடுத்த சில ஆண்டுகள் வரையில், வெளியே வேறு வேலைகளுக்குப் போகக் கூடாதென இரயில்வே போர்டு தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. வெளி வேலைக்கு அவர்கள் போடும் மனுக்கள் அனுப்பப்படமாட்டாதாம்.

இராணுவ அதிகாரிகளுக்கு 'நோட்டீஸ்'

தென் வியட்நாம் முன்னாள் மன்னர் பாவோ-டாயுடனும், போட்டி இராணுவத் தலைவருடனும் தொடர்பு கொண்டிருந்ததாகக் கருதப்படுபவர்களும், தனதுசர்க்காரிலுள்ளவர்களுமான 5 கர்னல்கள், 2 மேஜர்கள், வேறு பல இராணுவ அதிகாரிகளுக்கு பிரதமர் தியெம், வேலை நீக்க 'நோட்டீஸ்' தந்து விட்டாராம்!

பம்பாய் அரசாங்கத்திற்கு எதிராக நேரடி நடவடிக்கை!

விலக்கப்பட்ட உணவு இலாகா ஊழியர் எச்சரிக்கை!

பம்பாய், மே 26—

பம்பாய் அரசாங்கத்தின் தலைமைச் செயலாளரின் மாளிகையின் முன் குடும்பங்களுடனோ, அல்லது தனிமையிலோ மறியல் செய்யப்போவதாக அரசாங்க உணவு இலாகாவிலிருந்து விலக்கப்பட்டு, வேலையின்றி அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

வேலையின்றித் தவிக்கும் அவர்களுக்கு உடனடியாக வேலை தேடித்தர அரசாங்கம் முன்வரவில்லையானால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக ஊழியர்கள் அறிவித்துள்ள தகவலை பம்பாய் அரசாங்க அறிக்கை அறிவித்திருக்கிறது.

அத்துடன், சட்டத்திற்குப் புறம்பான நேரடி நடவடிக்கையில் கலந்துகொள்ளும்பட்சத்தில், அவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் எதுவானாலும் இனி மறுக்கப்பட்டுவிடும் எனவும் அரசாங்கம் எச்சரித்துள்ளது.

ஆண்டவன் அளித்த அதிகாரமாம்!

சட்ட மந்திரி கூறுகிறார்!

ஆளும் அதிகாரத்தை தேசியக் கட்சி பெற்றுள்ளது ஆண்டவனின் சித்தமென்றும், சமயசந்தர்ப்பத்தினால் இவ்வாய்ப்பு கிடைத்துவிடவில்லையென்றும், தென்னாப்பிரிக்க சட்ட சபையில், அந்நாட்டின் சட்ட மந்திரி கூறினாராம்!

தோல்வியடைந்தார்!

திருச்சூர் தொகுதியில், திரு—கொச்சி சட்ட சபைக்கு நடைபெற்ற உப-தேர்தலில், அம்மாநில கம்யூனிஸ்டு கட்சி பொதுக் காரியதரிசியும், கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினருமான தோழர் சி. அச்சுத மேனனும், தோழியர் லீலா மன்றாடியார் என்ற காங்கிரஸ் அபேட்சகரும் போட்டியிட்டனர்; காங்கிரசுக்கு 15,677 ஓட்டுகளும், கம்யூனிஸ்டுக்கு 12,621 ஓட்டுகளும் கிடைத்தன; 3,056 ஓட்டுகள் வித்தியாசத்தில் கம்யூனிஸ்டு அபேட்சகர் தோல்வியடைந்துள்ளார்

'நால்வர்' சந்திப்பு: ரஷ்யாவின் சம்மதம்

அமெரிக்காமீது குற்றச்சாட்டு

உலகப் பிரச்சினைகளைப் பரிசிலனை செய்வதற்காக நான்கு வல்லரசுத் தலைவர்கள் கூடிப் பேசுவதற்கு ரஷ்யா தயாராக இருப்பதாக அதிகாரபூர்வமாகத் தகவல் தரப்பட்டுள்ளதாம்.

நான்கு வல்லரசுகளின் பேச்சுவார்த்தைகளைத் தோல்வியடையச் செய்வதற்கான திட்டங்களுடன் மாநாட்டிற்கு வருவதாகவும், அவசரமான உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா முயற்சிக்கவில்லை என்றும், ரஷ்யக் குறிப்பு கூறுகிறதாக அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க உதவி

இந்தியாவுக்கு ரூ. 40 கோடி கிடைக்கிறதாம்

அதிகாரபூர்வமான தகவல்

1955 ஜூலை 1-ந் தேதி முதல் 1956 ஜூன் 30-ந் தேதி முடிய ஒரு வருடத்திற்கு இந்தியாவிற்கு 8½ கோடி டாலர் (சுமார் 40.37 கோடி ரூபாய்) உதவியளிக்கும்படி அமெரிக்க சர்க்கார் சிபார்சு செய்துள்ளதாக, புதுடில்லிக்கு கிடைத்துள்ள அதிகாரபூர்வமான தகவல்களிலிருந்து தெரியவருகிறதாம்.

உறுதியான அரசாங்க அமைப்பு காண!

பிரெஞ்சு அரசியல் சட்டம் திருத்தப்படும்

பிரெஞ்சு அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைப்பதென தேசீய சட்ட மன்றம் முடிவெடுத்திருக்கிறதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தை பலப்படுத்தவும், நிலையற்ற தன்மையை ஒழிக்கவுமான வழிவகைகளைக் காணும் பொருட்டு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று 404 வாக்குகளும், அதற்கு எதிராக 210-வாக்குகளும் பதிவாகி, தீர்மானம் பெருவாரியான வாக்குகளால் நிறைவேறியிருக்கிறது

கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள் ஆகியோர் தவிர இதர எல்லா குழுக்களாலும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

(1) நம்பிக்கை வாக்கும், கண்டனத் தீர்மானங்களும்; (2) மக்கள் சபையைக் கலைக்கும் முறையை சீர்திருத்துவது; (3) பிரெஞ்சு யூனியனை புனரமைப்புச் செய்வது; (4) அரசியல் சட்டத்தைத் திருத்துவதுடன், அதனை எளிதாக்குவதற்கான வழிகளைக் காண்பது—ஆகியவை குறித்து ஆராயவேண்டும் என்று தீர்மானம் கோருகிறது.

இப்போதுள்ள அரசியல் சட்டப்படி, மேல்சபையான செனேட் சபை, இந்தத் தீர்மானத்தை இன்னும் மூன்று திங்களுக்குள், பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்க வேண்டும்.

அதன் பிறகு, செனேட் சபையும், தேசிய சட்டசபையும் கூடி அரசியல் சட்ட திருத்தத்திற்கான வழிகளை விரிவாக ஆராய்வர்.

இதன் பின்னர், மந்திரி சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும், பின்னர், இரண்டு சபைகளிலும் 5-ல் மூன்று பங்கு பெரும்பான்மை தேசிய வாக்கெடுப்பு இவற்றின் மூலம்தான் அது சட்டமாக முடியும்.

பாமர மனிதனின் புத்திகூர்மையில்

'மிக்க மதிப்பு உண்டு' என தேஷ்முக் நம்பிக்கை!

சென்னை, மே 27—

"நாம் எதிர்பார்ப்பதைவிட வெகு விரைவிலேயே மக்களுக்கு, 'மாறுதல்'கள் பழக்கமாகிவிடுகிறது; கல்வி கற்காத பாமர மனிதனின் புத்திக் கூர்மையில் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு" என்று, இந்திய நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் கூறியுள்ளார். மேலும் அவர் சொன்னார்:—

"தசாம்ச (ரூபாய்க்கு 16 அணா என்று இருப்பதை, ரூபாய்க்கு 100 சதம்—சென்ட்) முறையை நடைமுறைக்குக் கொண்டுவர இதுதான் சரியான சமயம்; ஆரம்பத்தில் சில தொல்லைகள் இருக்கத்தான் செய்யும்; ஆனால், இந்த மாறுதலை எப்பொழுதாவது செய்துதானே ஆகவேண்டும்?"

அமுலுக்கு வருகிறது

உணவுக் கலப்பட தடைச் சட்டம் ஜூன் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வருமென அறிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் புதிய வரிகள்!

ஆண்டுதோறும் ரூ. 100-கோடி விதிக்கப்படும்

பொருளாதார அபிவிருத்தி குறித்து மத்திரி தேஷ்முக்

சென்னை, மே 27—

"முதல் 5 ஆண்டுத் திட்ட காலத்தில், ஏறத்தாழ ரூ. 640 கோடிவரை துண்டுவிழும் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதால் நாட்டுப் பொருளாதாரத்தில் எவ்வித பிரதிகூலமும் ஏற்பட்டுவிடவில்லை ;

"இரண்டாம் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே (1956-57-ல்) கணிசமாகத் துண்டு விழும் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்; துண்டுவிழும் தொகை சுமார் 400 கோடி ரூபாயாக இருக்கும்,"

—என்று, மத்திய நிதி மந்திரி தேஷ்முக் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"முதல் திட்டத்தின் இறுதி ஆண்டான 1955—56-ல், அபிவிருத்திக்காக, சர்க்கார் துறையில் ரூ. 640 கோடி செலவு செய்ய வகை செய்திருக்கிறோம் ; இந்த அபிவிருத்தி வேகம் அடுத்த ஆண்டிலும் பேணப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுமாதலால், 1956—57-ல், பொதுத் துறையில் ரூ. 700 கோடி செலவு செய்ய நாம் வகை செய்ய வேண்டியிருக்கும்; ஆனால், ரூ. 300 கோடிதான் நிதி வளம் இருக்குமென மதிப்பிடப்படுவதால், ரூ. 400 கோடிக்கு துண்டு விழும் வரவு - செலவுத் - திட்டம் தயாரிக்க வேண்டியிருக்கும்.

"இப்போதுள்ளதுபோல் விலைவாசிகள் நீடிக்குமானால், துண்டு விழும் திட்டத்தால் ஆபத்தொன்றுமில்லை என அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசீய வருமானத்தை 5 சதவிகிதம் அதிகரிக்க திட்டத்தின் கர்த்தாக்கள் உத்தேசித்துள்ளனர்; இன்னும் 15 ஆண்டு காலத்தில் தேசிய வருமானம் இரட்டிப்பாக வேண்டுமென்பது அவர்கள் நோக்கமாகும்.

"இரண்டாம் திட்டக் காலத்தில் ஆண்டுதோறும் ரூ 900 - கோடி அபிவிருத்திக்கென செலவிடப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது ; அபிவிருத்திச் செலவு முதலீட்டுச் செலவு ஆகாது ; எனவே, அதற்கு, சர்க்காரின் நடைமுறை வருவாயிலிருந்தே வழி செய்தாக வேண்டும் ; இதற்காக ஆண்டுதோறும் ரூ 100 கோடி வரிகள் எழுப்பப்பட வேண்டும் ; மேற்கண்ட பெரும் அளவில் செலவாகும் ஒரு அபிவிருத்தித் திட்டத்தை நாடு ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறதா ? அதிக வரிகளை நாடு ஏற்குமா ?—என்பதை, நாட்டு மக்களே முடிவு செய்ய வேண்டும்.

"நாட்டி பொருளாதாரத்தில் தற்போது காணப்படும் பணப் புழுக்கக் குறைவுப் போக்கு—அதாவது, விவசாயப் பொருட்களின் விலைவாசிகள் வீழ்ச்சி—முதல் ஐந்தாண்டுத் திட்டமுடிவில் மறைந்துவிடும் என நம்புகிறேன்."

"பொதுவாக வரிகளை உயர்த்துவதற்குப் பதிலாக ஏகபோக வர்த்தகங்கள்மீது வரி விதிப்பதின் மூலமோ அல்லது வரி விசாரணைக் குழு சிபாரிசு செய்துள்ளபடி ஏற்றுமதி வர்த்தகம் போன்ற தொழில்களை சர்க்காரே மேற்கொள்வதின் மூலமோ குறிப்பிட்ட ரூ. 100 - கோடியைச் சம்பாதிக்க முடியாதா ?"

என்று, நிதி மந்திரியைக் கேட்டபோது, தேஷ்முக் பதிலளிக்கையில், முடிந்த அளவுக்கு, சில தொழில்களை சர்க்காரே ஏற்று நடத்தி வருவாய் தேடவும் முயற்சிக்கப்படும்; 'வரி' என்றால், 'சர்க்காருக்கு வருமானம் கிடைக்கும் வழிகள் எல்லாவற்றையும் குறிக்கும்,' என்று கூறியிருக்கிறார்.

கணக்கில் வராத அகதி சொத்துக்கள்

அகதிகள் சொத்துக்கள், கணக்கில் ஏதேனும் வராதிருக்கின்றதா என்பதைக் கண்டுபிடிக்க பாகிஸ்தான் அரசாங்கம் முயற்சிகள் மேற்கொள்ளுவதாகத் தெரிகிறது.

நகர்ப்புறங்களில் உள்ள அகதிகளுக்குச் சொந்தமான அசையாப் பொருள்கள் பற்றிய கணக்கெடுப்பு செய்வதுடன், இவை பற்றிய ஆதாரக் குறிப்புகளைப் புனர் பரிசிலனை செய்வது என்றும் பாகிஸ்தான் அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதனால், கணக்கில் வராது போயிருக்கும் சொத்துக்கள் ஏதேனுமிருந்தால் அவற்றையும் கணக்கிட, சர்க்கார் முயற்சிகள் எடுக்கிறதாம்.

இதற்காக தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

'பிண'த்திற்கு உயிரூட்டவாம்!

'செய்வனவும் - செய்யக்கூடாதனவும்' பற்றி காங்கிரஸ் குழுக்களுக்கு சுற்றறிக்கை

காங்கிரஸ் இயக்கத்தில் ஒருவர், ஒரு பதவியை ஒரு முறைக்கு மேல் வகிக்கக்கூடாது ; இதனால், பல காங்கிரஸ்காரர்களுக்கு இயக்க நிர்வாக அனுபவம் கிடைக்கும். மேலும், இதனால், 'கோஷ்டி'கள் சேர்க்கப்படுவதற்கான மூலகாரணமும் அழிந்தொழியும் ;

"காங்கிரஸ் இயக்கத்திலும், சட்டசபையிலும், இதர ஸ்தல நிறுவனங்களிலுமாக ஒருவரே பல பதவிகளை வகிப்பதை அனுமதிக்கக் கூடாது ;

"இப்போது ஒருவரே அம்மாதிரி பல பதவிகளிலிருந்துகொண்டு பொறாமையையும், பிளவு மனப்பான்மையையும் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் ; எனவே, நமது பொதுக்கொள்கை 'ஒரு நபருக்கு ஒரு பதவி' என்ற முறையில்தான் இருக்க வேண்டும் ; என்றாலும், மாநில காங்கிரஸ் குழுத் தலைவர் சிலருக்கு விதிவிலக்கு தரலாம் ;

"காங்கிரசில் உள்ள சாதி வெறியை அழிப்பதற்காக காங்கிரசில் தீவிர ஊழியர்களாயிருப்போர் எந்தவித சாதி, வகுப்பு, குல இயக்கங்களில் உறுப்பினராயிருக்கக் கூடாது ;

"சாதிப் பெயரால் நடத்தப்படும் எந்த ஒரு நடவடிக்கையிலும்—அது தாழ்த்தப்பட்டவர் உயர்வுக்காக அல்லது தீய சமூக வழக்க ஒழிப்புக்காக இருந்தாலன்றி—காங்கிரஸ்காரர்கள் ஈடுபடக்கூடாது ;

"சாதிப் பெயரால் நடைபெறும் பள்ளிகள், மாணவர் விடுதிகள், கல்லூரிகள் போன்ற நிறுவனங்களிலும் காங்கிரஸ்காரர்கள் இணைந்து வேலை செய்யக் கூடாது ;

"அத்தகைய நிறுவனங்கள் எல்லா வகுப்பினருக்கும் சாதி வகுப்பு வேறுபாடின்றி அனுமதி தருவதாயிருப்பின் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளலாம்,"

என்று, மாநில காங்கிரஸ் குழுக்களுக்கு மத்திய குழு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் காணப்படுகிறது.

காங்கிரஸ் இயக்கத்திற்கு 'ஆரோக்கிய புது இரத்தம்' தருவதுபோல, இந்த 'செய்ய வேண்டியன—செய்யக்கூடாதன' என்ற கட்டளைகள் மேலிடத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

'காங்கிரசைப் புனிதப்படுத்த வேண்டும்,' என்ற பேர்காம்பூர் தீர்மானமே இந்தக் கட்டளைகளுக்கு அடிப்படை என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஷ்ரீமன் நாராயண் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் தொகை நெருக்கடியாம்!

ஐயாயிரம் குடும்பங்களை வேறு மாநிலத்தில் குடியேற்றத் திட்டம்

திரு - கோச்சி முதலமைச்சர் ஏற்றுக்கொண்டாராம் !

மக்கள் நெருக்கடி மிகுந்த திரு-கொச்சியிலிருந்து 50 ஆயிரம் குடும்பங்களை மக்கள் மதொகை குறைவாயுள்ள அசாம், மத்திய பாரத், போபால், பம்பாய் மாநிலத்தின் சில பகுதிகள், ஒரிசா, அந்தமான், நிகோபார் ஆகியவற்றில் குடியேற்றுவதற்கான தமது திட்டத்தை திரு-கொச்சி முதன் மந்திரி ஏற்றுக்கொண்டுவிட்டதாக மக்கள் சபை உறுப்பினரான சி பி. மாத்தன் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை திட்டக் குழு ஒப்புக்கொள்வதாகவும், இதனை 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு வற்புறுத்தியிருப்பதாகவும், முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உங்கள் குறிப்புக்கு !

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டத்தின்கீழ், 1,092 வீடுகளைக் கட்டுவதற்காகக் கடனாகவும், உதவித் தொகைகளாகவும் ஏப்ரல் மாதத்தில், இந்திய சர்க்கார் ரூ. 36,83,875 அனுமதித்திருக்கின்றனர்.

ஐதராபாத் நகரில் 850 ஓர் - அறை வீடுகளைக் கட்டுவதற்காக அம்மாநில சர்க்காருக்கு ரூ. 14,83,250 கடனாகவும், அத்தொகையளவில் உதவிப் பணமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

வாரங்கலில் 180 ஓர்-அறை வீடுகளைக் கட்டுவதற்காக அம்மாநில சர்க்கார் ரூ. 3,00,600 கடனாகவும், அத்தொகையளவில் உதவிப் பணமும் பெறுகிறார்கள்.

பெப்சுவிலுள்ள டால்மியா டாட்ரி சிமெண்ட் தொழிற்சாலைக்கு 30 ஓர்-அறை வீடுகளையும், 12 இரு-அறை வீடுகளையும் கட்டுவதற்காக ரூ. 45,405 கடனாகவும், ரூ. 30,270 உதவிப் பணமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

அகமதாபாதில் 20 ஓர்-அறை வீடுகளைக் கட்டுவதற்காக படேல் கூட்டுறவு குடியிருப்பு வசதி சங்கத்துக்கு (லிமிடெட்) ரூ. 27,000 கடனாகவும், ரூ. 13,500 உதவிப் பணமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

கொரநாட்டுக் கருப்பூர் பஞ்சாயத்து சபையில்

அண்ணா உருவப் படத் திறப்பு

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனுக்கு வரவேற்பு

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் உள்ள கொரநாட்டு கருப்பூர் பஞ்சாயத்துசபை கடந்த 20–5–55-ல் கூடியபோது, தி. மு. கழக முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் உருவப் படத்தை, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கொண்டு திறந்து வைப்பதெனவும், அதுபோது பொதுச் செயலாளருக்கு வரவேற்புத் தருவதெனவும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டிருப்பதாக, பஞ்சாயத்துத் தலைவர் கோ. நாராயணசாமி அறிவிக்கிறார்.

குருகுலத்திற்கு அனாதைக்குழந்தைகள்

"இராமகிருஷ்ண குருகுலத்தில் ஏழை அனாதைச் சிறுவர்களுக்கு உணவு, உடை, இருப்பிட வசதிகளுடன் ஆதார ஆரம்பக் கல்வியும், பலவகை தொழிற் பயிற்சியும் இலவசமாக அளித்து வரப்படுகிறது. இவ்வாண்டில் மேலும் அதிகப்படியான அனாதைக் குழந்தைகள் இக் குருகுலத்தில் சேர்ந்து பயன்பெற அநேக விண்ணப்பங்கள் வந்துள்ளன; ஆனால், அவையெல்லாம் பெரும்பாலும் தங்கள் தங்கள் குழந்தைகளுக்காகவே செய்துகொண்ட விண்ணப்பங்களாக இருக்கின்றன. உண்மையான அனாதைக் குழந்தைகளுக்கு அக்கரை எடுத்துக் கொண்டு விண்ணப்பம் எழுதியுள்ளவர் மிகச் சிலரே.

"தமிழகத்தின் ஒவ்வொரு ஊரிலும் தாயும் தந்தையுமற்ற திக்கற்ற சிறுவர்களும், கணவனையிழந்த கைம்பெண்களால் காப்பாற்ற முடியாத இளஞ்சிறுவர்களும் எவ்வளவோ பேர் இருப்பார்கள். அத்தகைய நிலையிலுள்ளவர்களுக்கு குருகுலத்தின் செய்தி எட்டும்படியாகச் செய்ய, ஆங்காங்குள்ள, பொதுமக்கள் நலனுக்குத் தொண்டாற்றுவோர் சிறிது முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்," என்று, பிரம்மச்சாரி இராமசாமி அறிவிக்கிறார்.

விவரம் அறிய விரும்புவோர், "தலைவர், இராமகிருஷ்ண குடில் திருப்பராய்த்துறை அஞ்சல், திருச்சி மாவட்டம்" என்ற முகவரிக்கு எழுதுக.

பார்வதி அம்மாள் வாழ்க்கைக் குறிப்பு

பேளுக்குறிச்சி, மே. 24—

பழனி மாம்பழ கவிசிங்க நாவலரவர்களால் 'சந்திர விலாசம்' பாடல் பெற்றவரும், 1889-ல் பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் ஐந்தாவது மாநாட்டின் பிரதிநிதியும், பேளுக்குறிச்சி ஜமீன்தாரருமான திரு வேலப்ப கவுண்டர் அவர்களின் குமாரத்தியும், துத்திக்குளம் கிராம முனிசிபு பெரியண்ண கவுண்டர் அவர்களின் மனைவியும், சேலம் கோவாப்ரேட்டிவ் சென்ட்ரல் பாங்கியின் டைரக்டரும், சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளருமான தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் தாயாருமான திருமதி பார்வதி அம்மாள் அவர்கள் தனது 116-வது வயதில், 20—5—55 இரவு 9 மணிக்கு இயற்கை எய்திவிட்ட செய்தியை முன்னர் அறிவித்துள்ளோம் அவருக்கு இரு புதல்வர்களும், பேரன், பேத்திகளும், முப்பேரன், முப்பேத்திமார்களும் இருக்கிறார்கள்.

திருமணங்கள்

★

முசிறி தாலுகா உமையாள்புரத்தில் 26—5—55 காலை 10 மணிக்கு, தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் தோழர் உ. வே. செல்வராஜ்—தோழியர் சி. சரோஜா திருமண ஒப்பந்தம் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழியைக் கூறி, மலர் மாலை சூட்டிக்கொண்டனர், தாலியும் கட்டப்பட்டது.

தலைவர் முன்னுரையாக சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் பற்றியும், புரோகிதச் சடங்குகளை ஒழிப்பதின் நோக்கம் பற்றியும், விளக்கினார்.

பின்னர், தோழர்கள் இராசகோபால், கஸ்தூரி-ராஜரெத்தினம், ஏ. டி தருமலிங்கம், வையாபுரி ஆகியோர் மணமக்களைப் பாராட்டி, வாழ்த்துரைகள் வழங்கினர். மணமக்கட்கு நண்பர்கள், பரிசுகளும், வாழ்த்து மடல்களும் வழங்கினர். மணமக்கள் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அளிக்கப்பட்டது-பெற்றுக்கொண்டோம்— நன்றி — பொறுப்பாளர்.

• • •

26—5—55 அன்று காலை 9 மணியளவில், மீர்சாகிப்பேட்டையில் தோழர் வே. கன்னியப்பன்—தோழியர் மேனகா திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது.

திரு. காரணதுரைக்கண்ணன் அவர்கள் திருமண விழாவிற்குத் தலைமை ஏற்று சிறப்புரை நிகழ்த்தி திருமணவினையினை முடித்து வைத்தார்.

முன்னதாக, தோழர் கோ. இளவரசு எல்லோரையும் வரவேற்று உரை நிகழ்த்துகையில், 'சீர்திருத்தத் திருமணம் ஏன்?' என்பதை விளக்கிப் பேசினார்.

மணமக்களைப் பாராட்டி தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் பேசினார்.

மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்து மடல்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன், எண்ணற்ற பரிசுகளும் வழங்கப்பட்டது.

தோழர் மு புரட்சிமணி நன்றி கூறினார்.

திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்புடன் தந்தனர்— வரப்பெற்றோம்-நன்றியுரியது—பொறுப்பாளர்.

• • •

தோழர் வ. சரவணன்—தோழியர் லலிதா திருமணம், தோழர் டி. சண்முகனார் எம். எல். ஏ, அவர்கள் தலைமையில் தின்னனூர் மணமகன் இல்லத்தில் 26–5–55 அன்று காலை 9 மணி அளவில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் கே. எம். கண்ணபிரான், எஸ் எல். தென்னரசு, வீராகவன், தோழியர் தேசியமணி ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டதுடன், வாழ்த்துப் பத்திரங்களும் வாசித்தளிக்கப்பட்டன.

திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 தரப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

குறிப்பு :— மணமகனான தோழர் சரவணன், கடந்த 1953 - ஜூலையில் நடைபெற்ற 'ரயில் நிறுத்த' அறப்போரில் ஈடுபட்டு ஒரு மாத காலத்திற்கு மேல் சிறைப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

• • •

26—5—55ல், மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் தோழர் கனகராசன் — தோழியர் பூரணவள்ளி வாழ்க்கை ஒப்பந்த சீர்திருத்த திருமணம் வழக்கறிஞர் திரு. எம். எஸ். வீரத்தேவர் தலைமையில் நடைபெற்றது மணமக்களைப் பாராட்டி, தோழர்கள் இளஞ்சேரன், சலாம் பேசினர் ; ஏராளமான தோழர்களும், உறவினர்களும் அன்பளிப்புகள் பல அளித்தனர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

உணவுப் பொருளைப் பாதுகாக்க வழி !

அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் மாநிலக் கல்லூரியில் ஒரு இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது; தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கருவிகளுள் இது மிகவும் முற்போக்கானது. இது, உணவைச் சூடாக்காமலே பாதுகாக்கிறது. உணவுப் பொருள்களைக் கெடுக்கும் பூச்சிகளை அந்த இயந்திரம் கொன்ற வண்ணமாயிருக்கிறது ; உணவுப் பொருள்களை நெ[illegible]லம் கெடாமல் வைத்துக்கொள்ள அது துணை செய்கிறது.

பாறை வெடித்து 10 பேர் பலி

இராபர்ட்சன்பேட்டை, மே 27—சாம்பியன் ரீப் தங்கச் சுரங்கத்தில், இன்று காலை 9½ மணிக்கு ஒரு பாறை வெடித்து பெரிய விபத்து ஏற்பட்டது. இதனுல் 10 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும், 8 பேர் காயமடைந்தனராம்.

'யுத்த மேகம்?'

தெற்கு வியட்நாம் பிரதமர் தியம், சைகோனில் ஒரு ஒப்பந்தத்திற்கு வருவது குறித்து விடுத்த இறுதி எச்சரிக்கையை ஹோவா-ஹாவோ புத்த இயக்கத்தின் தலைவர் நிராகரித்துவிட்டனராம்.

தென் மேற்கு வியட்நாம் பகுதியில் சிறு மோதுதல்கள் மாத்திரம் நடைபெற்றன. பிரதமர் தியமின் சேனையைச் சேர்ந்த 24,000 வீரர்கள் போர் புரிவதற்குத் தயாராக உள்ளனர்.

'நீர்வளிகுண்டு தயாரிக்க வேண்டும்'

பிரிட்டிஷ் வாக்காளர்கள் தீர்ப்பு

லண்டன், மே 27—

'பிரிட்டன், நீர்வளிக்குண்டு உற்பத்தி செய்யக்கூடாது,' என்ற பிரச்சினையை முன்வைத்து சுயேச்சையாக தேர்தலுக்கு நின்ற சர். ரிச்சர்டு ஆக்லண்டு என்ற முன்னாள் தொழிற்கட்சிக்காரர் தேர்தலில் தோல்வி கண்டிருக்கிறார்.

தொழிற்கட்சியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு, 'நீர்வளிக் குண்டை தடை செய்க' என்ற ஒலி முழக்கத்துடன் தேர்தலில் போட்டியிட்ட அவர், 6,514 வாக்குகள் மட்டும் பெற்று தோல்வி கண்டிருக்கிறார்.

முதலில், அவர் தொகுதியில் உப-தேர்தல் நடத்துவதாயிருந்தது; ஆனுல், அந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது.

அவர் கிரேவ்சண்ட் என்ற தொகுதியில் போட்டியிட்டார்.

இந்தத் தேர்தலில், மற்றவர்களுக்கு இல்லாத விளம்பரம் அவருக்குத் தரப்பட்டது. ஆச்சாரியாரின் ஆதரவும்-ஆசீர்வாதமும் ரிச்சர்ட் ஆக்லாண்டுக்கு இருந்தது. அவரைக் குறித்தும், அவர் குறிப்பிட்ட அணுகுண்டு உற்பத்தியை கைவிடும் கோரிக்கை குறித்தும் பிரிட்டிஷ் வாக்காளர்கள் பொருட்படுத்தினதாகத் தெரியவே இல்லை. அவரைத் தோற்கடித்துவிட்டனர் வாக்காளர்கள்.

பாட்டர்சி என்ற வேறு ஒரு தொகுதியில், எரிக் பென்னர் என்ற ஒரு சுயேச்சையும், 'பிரிட்டன் நீர்வளிக்குண்டு உற்பத்தியில் ஈடுபடக்கூடாது' என்ற குரலுடன் போட்டியிட்டு மிக மிகக் குறைந்த—622 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வி கண்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

கைதியின் வெற்றி

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தனித்து வாழும் அயர்லாந்தை மீண்டும் பிரிட்டனுடன் இணைக்க வேண்டும்—தேவையானுல் பலாத்காரமாகவே கூட—, அதற்காக தன்னை அர்ப்பணித்துள்ள ஒருவர், தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்.

ஆனுல், அவர் போலீஸ் நிலையம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்திய குற்றத்திற்காக, 10 ஆண்டு தண்டனை தரப்பட்டு சிறையிலிருந்து வருகிறார்.

பிரிட்டிஷ் தேர்தல் முடிவு: கன்சர்வேடிவ் பலம் கூடிவிட்டது!

தொழிற் கட்சியின் செல்வாக்குச் சரிவு!

கம்யூனிஸ்டு அபேட்சகர்கள் ஜாமீன் இழந்தனர்!

உலக அரசியலை உருவாக்கும் வல்லமை கொண்டுள்ள பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் முடிவடைந்து விட்டது.

வின்ஸ்டன் சர்ச்சிலை முன்னுள் தலைவராகக் கொண்டதும், அந்தோனி ஈடனை இந்நாள் தலைவராகக் கொண்டு இயங்குவதுமான கன்சர்வேடிவ் கட்சி, இதுவரை இல்லாத அளவு அதிகப்படியான இடங்களை இத்தேர்தலில் பெற்றிருக்கிறது.

1951-ல் அக்கட்சியினர், இரண்டாம் பெரும் போருக்குப் பின்னர் முதல் முதலாக அதிகாரத்திற்கு வந்தது முதற்கொண்டு, இதுவரை பதினெட்டு உறுப்பினர்களுக்கு மேல் பெரும்பான்மை நிலை இருந்தது கிடையாது; ஆனுல் இத்தேர்தலிலே, மற்றக் கட்சிகளைவிட 60 உறுப்பினர்களைக் கூடுதலாகக் கொண்டு, பெரும் பலமுடைய கட்சியாக அக்கட்சி தேர்தலில் வெளிவந்து இருக்கிறது.

620 உறுப்பினர்களைக் கொண்ட பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் 342 இடங்களை கன்சர்வேடிவ் கட்சியும், 276 இடங்களை தொழிற் கட்சியும், 5 இடங்களை லிபரல் கட்சியும் பிடித்திருக்கின்றன. இன்னும் ஆறு இடங்களுக்குத்தான் தேர்தல் முடிவு தெரியவேண்டி இருக்கிறது.

"தங்களுடைய நாட்டிற்காகத் தாங்கள் நிறைவேற்றித் தரவேண்டிய ஒரு பெரும் தேசியக் கடமை தங்களுக்கு இருப்பதாக பிரிட்டிஷ் இளைஞர்கள் உறுதியாக நம்புகின்றனர் என்பதில் ஐயமில்லை; வர்க்க பேதத்தை முன் வைத்து, சிலர் தேர்தலில் போட்டியிட்டதற்கு, அவர்கள் அனுதாபம் இருக்கவில்லை என்பது விளக்கமாகிவிட்டது,"

என, தேர்தலில் தம் கட்சி வெற்றி பெற்றதற்கு விளக்கம் தந்துள்ளார் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரும், இந்நாள் பிரதமராகவும் உள்ள அந்தோனி ஈடன்.

முக்கிய எதிர்க்கட்சியாகத் தேர்தலில் ஈடுபட்ட தொழிற் கட்சியின் தலைவரான கிளமெண்ட் அட்லி, தோல்வி கண்டு மனமுடைந்து இருக்கிறார்; அவருக்கோ வயது 72 ஆகிறது; மேலும் அவர் கட்சியின் தலைவராக இருப்பது என்பது எதிர்பார்க்க முடியாதது.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்பது, பெருந் தலைவேதனை தரும் விஷயமாகும், தொழிற் கட்சிக்கு.

கட்சியின் கிளர்ச்சிக்காரராக இருந்துவரும் அனூரின் பெவானின் தலைமையை தொழிற் கட்சி ஏற்றுக் கொள்ளுமா, கொள்ளாதா என்பதில் முடிவு கூறுவது, இந்தக் கட்டத்தில் இலகுவானதல்ல.

பெவானின் ஆதரவாளர்களுக்கு, இத்தேர்தலில் கிடைத்துள்ள வெற்றி, பிரிட்டிஷ் வாக்காளர்களிடம் பெவான் போக்கிற்கு ஆதரவு இருக்கிறது என்பதைக் காட்டுவதாக இல்லை. முக்கியஸ்தர்களான கைக்செல்பட்டு..., ஜிப்பரிபிங்கும் தேர்தலில் தோற்றுப் போயுள்ளனர்.

துவக்க முதல், முடிவுவரை தொழில்களை அரசாங்க மயமாக்குவதும், சமுதாய பாதுகாப்பும் திட்டமிடப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளும் தொழிற் கட்சியின் அடிப்படை நோக்கங்களாகும்; எதிர்காலத்தில் அணு - நீர்வளிக் குண்டுகளைப் பரீட்சிக்கக் கூடாது என்பதும், தொழிற் கட்சியின் தேர்தல் குறிக்கோளாகும்.

அணு குண்டை உற்பத்தி செய்வதற்கு எதிராகத் தேர்தலில் கலந்துகொண்ட சுயேச்சைவாதியான எரிக் பென்னர் என்பார் 622 வாக்குகளே பெற்றுர்; கட்டின முன் பணத்தையும் இழந்தார்.

17 இடங்களுக்குக் கம்யூனிஸ்டு கட்சியினர் போட்டியிட்டனர். தேர்தல் முடிவு தெரிவிக்கப்பட்டுள்ள 14 தொகுதியிலும் அவர்கள் கட்டிய முன்பணத்தை இழந்தே உள்ளனர்.

140 இடங்களுக்குப் போட்டியிட்ட லிபரல் கட்சியினர், 6 இடங்களை மட்டும் தான் கைப்பற்ற முடிந்தது.

வெற்றி பெற்ற கன்சர்வேடிவ் கட்சியின் முக்கியஸ்தர்கள், முன் தேர்தலில் பெற்ற வாக்குகளைக் காட்டிலும் இத்தேர்தலில் கூடுதலாகப் பெற்றிருப்பதும், வெற்றி பெற்ற தொழிற் கட்சியின் முக்கியத் தலைவர்கள் முன் தேர்தலில் பெற்றதைக் காட்டிலும் குறைவாகப் பெற்று வெற்றி பெற்றிருப்பதும், இத்தேர்தல் மூலம் பெற்றுள்ள படிப்பினையாகும்.

நூற்றுக்கு எண்பது வாக்காளர்கள் வீதம் தேர்தலில் வாக்காளர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

முதல் முறையாக பிரிட்டிஷ் பொது மக்கள் சபை ஜூன் 7-ந் தேதி கூட இருக்கிறது.

ஒரு கிழமை கழித்து, பிரிட்டிஷ் இராணியின் திறப்பு விழா சடங்கு நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் எம். எல். ஏ.-வுக்குக் கத்திக் குத்து!

திருவனந்தபுரம், மே 27—

முன்னுள் மந்திரியும், திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் முன்னுள் தலைவரும் இப்போது காங்கிரஸ் எம்.எல்.ஏ.-வாக உள்ளவருமான திரு எ சிதம்பரநாதநாடார் நாகர் கோயிலுக்கு அருகில் சோரங்குடியில் கத்தியால் குத்தப்பட்டார் என்று தெரிகிறது.

அவர், சிறிய காயமே பெற்றுர் என்றும், வைத்தியசாலையில் குணமடைந்துவருகிறுர் என்றும் கூறப்படுகிறது.

ஒரு திருமணக் கூட்டத்தில், கிராமத்தின் நலத்திற்கென வசூலிக்கப்பட்ட பணத்தை யாரிடத்தில் ஒப்படைப்பது என்பது குறித்து எ சிதம்பரநாத நாடாரவர்கட்கும், திரு காசி நாடார் என்பவருக்கும் இடையே மாறுபட்ட கருத்து ஏற்பட்டதென்றும், பிறகு, பணத்தை யாரிடத்தில் ஒப்படைப்பது என்பது பற்றி ஒரு முடிவுக்கு வரப்பட்டதென்றும், எனினும், திருமணம் முடிந்த பிறகு காசி நாடார் அது பற்றி வெளியில் வேறு சிலருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது அப்பக்கமாகச் சென்ற சிதம்பரநாத நாடார் அங்கு கூடியிருந்த மக்களைக் கலைந்துபோக வேண்டுமென்று கூறியதாகவும், அதன் பின்னரே சிதம்பரநாத நாடார் கத்தியால் குத்தப்பட்டார் என்றும் போலீசுக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இதையொட்டி, சிதம்பரநாத நாடாரின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறவர்கள் காசி நாடாரைத்தாக்கியதாகவும் அதனுல் காசி நாடாருக்கு சிறு காயம் ஏற்பட்டதாகவும், அவர் கோட்டாறு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இது சம்பந்தமாகப் போலீஸ் இரண்டு வழக்குகள் பதிவு செய்துள்ளது.

சென்னை மாவட்ட தோழர்களுக்கு

★

"மாநில மாநாட்டு நிதிக்காக சென்னை மாவட்டம் ஒப்புக்கொண்ட பங்கீட்டுத் தொகை ரூ. 5,000 ஆகும்; தற்போது சேர்ந்திருக்கும் தொகை ஏறத்தாழ ரூ. 2,000 ஆகும்; இன்னும் சேர்க்கப்பட வேண்டியது ரூ. 3,000 ஆகும். இதற்காக நடத்தப்படவிருக்கும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்களுக்கு, கடந்த 24-ந் தேதி யன்று நடைபெற்ற கூட்டத்திற்குக் கிடைத்ததைப் போன்ற பேராதரவும், பெரியதோர் வசூலும் இருக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"மாநில மாநாட்டுக்கு தனிப்பட்ட முறையில் இதுவரை பணம் அனுப்பியுள்ள சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த தோழர்களைப் போல், இனிமேல் பணம் அனுப்ப இருக்கின்ற தோழர்களும், பணம் திரட்டிக் கொண்டிருக்கின்ற தொழிலாளத் தோழர்களும், நமதியக்கத்தைச் சார்ந்த படிப்பகங்களும், மன்றங்களும், கலா நிலையங்களும், இன்னபிற ஆதரவாளர்களும், அனுதாபிகளும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறுர்.

பணம் அனுப்பும் முகவரி:—
இளம்பரிதி, செயலாளர்,
தி மு. க. சென்னை மாவட்டம்,
சென்னை—13.

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சாத்தூர் வருகை

30—5—55 மாலை 7 மணிக்கு. சாத்தூர், சுப்ரமணிய நயினுர் திடலில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஆர். பி. சன்யாட்சென், டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோர் பேசுவர்.

தி.மு.க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மே 28: சிதம்பரம்
29: தூத்துக்குடி
30: சாத்தூர்
31: திண்டுக்கல்
ஜூன் 1: வயிரிச்செட்டிப் பாளையம்
2: பூவாளூர் லால்குடி

சொற் பயிற்சிக் கூட்டம்

29—5—55 காலை 10 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண். 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் வச்சிரவேலு தலைமையில், 'இளைஞர் கடமை' என்னும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பேசுவர்.

'இராமாயணம்' — நாடகம்

30—5—55 இரவு 9½ மணிக்கு தெள்ளூர் கிராமத்தில், தோழர் எம். கே. துரைசாமி தலைமையில் தி. மு. கழகத் தோழர்கள் நடிக்கும் 'இராமாயணம்' என்ற நாடகம் நடைபெறும். தோழர்கள் முல்லை சத்தி, அ. கருத்தோவியன், மு. சாமிநாதன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கன்னிவாடி
30—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்:
கே. ஜி. பழனிச்சாமி எம்.எல்.ஏ.
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
கோவை-செழியன்

இரவு 9½ மணிக்கு, தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில், கே. எஸ். எஸ். கலா மன்றத்தார் நடிக்கும் 'தூக்கு மேடை' என்னும் நாடகம் நடைபெறும்.

★

திண்டுக்கல்
வ. உ. சி. திடலில்
31—5—55 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எஸ். முத்து
பி. சமதர்மம்
என். முத்து

அன்று காலை 9 மணிக்கு, திண்டுக்கல் இரயில் நிலையத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும்.

★

பறங்கிப்பேட்டை
சஞ்சீவிராயர் கோவில் தெருவில்
31—5—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
க. அன்பழகன்

சென்னை நகர, தென் பகுதி அகில இந்திய தபால்காரர் 4-ம் பிரிவு தபால் ஊழியர் சங்க மாநாடு'

30—5—55 மாலை 6 மணிக்கு, மேற்படி சங்கத்தின் முதல் மாநாடு, சென்னை, இராயப்பேட்டை அஞ்சல் நிலையத்தில், தோழர் கே. எஸ். கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர் கபார் ஐயாஸ் மாநாட்டைத் திறந்துவைப்பார். தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

அகில இந்திய ஆர். எம். எஸ். ஊழியர் சங்கம்—முதலாவது சென்னை மாநில மாநாடு

29—5—55 மாலை 6 மணிக்கு சென்னை மெமோரியல் மண்டபத்தில், திரு ஆர். ஈ. டன்ஸ்டன் தலைமையில் நடைபெறும் திரு. செ. மி. பரிபூரணம் மாநாட்டைத் திறந்து வைப்பார். சென்னை முதல் அமைச்சர் திரு. காமராசர், திரு. குருசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

29—5—55 காலை 8½ மணிக்கு, சென்னை முத்துகிருஷ்ணன் தெரு, 28-ம் எண்ணுள்ள இல்லத்தில், சென்னை 8-வது வட்ட தி.மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

அலந்தூர் வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

1—6—55 இரவு 6½ மணிக்கு பெங்களூர்-அலசூர் தி. மு. கழகக் கிளையின செயற் குழுக் கூட்டம் முயற்சி மன்றத்தில் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு, ஐக்கிய கர்நாடக அமைப்பு ஆதரிக்கும்முகத்தான் பொதுக்கூட்டம் நடத்தி விளக்குதல் ஆகிய பொருள் பற்றி முடிவு எடுக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.